# யூலை – 22 – பொதுக்கால 16ம் வார ஞாயிறு

**"அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டார்" (மாற் 6:34)**

## முதல் வாசகம் : ஏரேமியா23 : 1 – 6

ஆண்டவர் கூறுவது என் மேய்ச்சலுக்குட்பட்ட ஆடுகளை அழித்துச் சிதறடிக்கும் மேய்ப்பவர்களுக்கு ஐயோகேடு!தம் மக்களை வழி நடத்தும் மேய்ப்பர்களுக்கு எதிராக இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே. நீங்கள் என்மந்தையைச் சிதறடித்துவிட்டீர்கள் அதனைத் துரத்தியடித்தீர்கள் அதனைப் பராமரிக்கவில்லை. இதோ உங்கள் தீச்செயல்களின் காரணமாக உங்களைத் தண்டிக்கப்போகிறேன், என்கிறார் ஆண்டவர்.என் மந்தையில் எஞ்சியிருக்கும் ஆடுகளை, நான் துரத்தியடித்த அனைத்து நாடுகளிலிருந்தும் கூட்டிச்சேர்த்து அவர்களுக்குரிய ஆட்டுப்பட்டிக்குக் கொண்டுவருவேன். அவையும் பல்கிப்பெருகும். அவற்றைப் பேணிக்காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி அவை அச்சமுறா. திகிலுறா. காணாமலும் போகா, என்கிறார் ஆண்டவர். ஆண்டவர் கூறுவது இதுவே, இதோ நாள்கள் வருகின்றன. அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள "தளிர்" தோன்றச் செய்வேன். அவர் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் ஞானமுடன் செயல்படுவார். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையும் நிலைநாட்டுவார்.அவர்தம் நாள்களில் யூதா விடுதலைபெறும் இஸ்ரயேல் பாதுகாப்புடன் வாழும். "யாவே சித்கேனூ" என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

## இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 2 : 13 – 18

சகோதர சகோதரிகளே! ஒருகாலத்தில் தொலைவில் இருந்த நீங்கள் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டுவரப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்துநின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார். பலகட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச்சட்டத்தை அழித்தார். இரு இனத்தவரையும் தம்மோடு இணைந்திருக்கும் புதியதொரு மனித இனமாகப்படைத்து அமைதி ஏற்படுத்தவே இவ்வாறு செய்தார்.தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச்செய்தார்.அவர் வந்து, தொலைவில் இருந்த உங்களுக்கும், அங்கிலிருந்த அவர்களுக்கும் அமைதியை நற்செய்தியாக அறிவித்தார்.அவர் வழியாகவே, இரு இனத்தவராகிய நாம் ஒரே தூய ஆவி மூலம் நம் தந்தையை அணுகும் பேறுபெற்றிருக்கிறோம்.

## நற்செய்தி : மாற்கு6 : 30 – 34

அக்காலத்தில் திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்துகூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். ஏனெனில் பலர்வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம்கிடைக்கவில்லை.அவ்வாறே அவர்கள் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்துகொண்டு, எல்லா நகர்களிலிருந்தும் கால்நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்குமுன் அங்கு வந்துசேர்ந்தனர்.அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக்கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவுகொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.

**தியானம்:** அன்பும் நட்பும் எங்கு உள்ளதோ அங்கே கடவுள் இருக்கின்றார். அன்பில் வாழ்பவர்தான் இறைவன். இறைவன் நம்மீது கொண்ட அன்பை அளவிட முடியாது. சாதாரண மனிதர்களாகிய நாம் பலரை அன்பு செய்கின்றோம். சிலரின் பிரிவுகளை தாங்க முடியாமல் கண்ணீர் வடிக்கின்றோம். நினைத்து நினைத்து அழுகின்றோம். எமது பலவீனத்தினால், நாம் கடவுளை விட்டு விலகி செல்லுபோது இறைவனும் எமக்காக கண்ணீர் வடிக்கின்றார். நாம் திரும்பி வரும்வரை காத்திருக்கின்றார். இவ்வுலகில் தாயின் அன்பை எல்லோரும் பெரிதாக பேசுவார்கள். தன்னலமற்றது தாயின் அன்பு. தனது குடும்பத்திற்காக, பிள்ளைகளுக்காக, தனது விருப்பு, வெறுப்புக்ளை எல்லாம் தியாகம் செய்வதுதான் தாய்மை. ஒரு தாயால் இவ்வாறு அன்பு காட்ட முடியும் என்றால், தாயின் கருவறையில் இருந்தே எம்மை தெரிந்து கொண்ட இறைவன் நம்மை எவ்வாறு அன்பு செய்வார்? இதனை நாம் நினைத்துப் பார்ப்பதே இல்லை. அன்பை மதிக்க தெரியாமல், எமது சுய நலன்களுக்காக, கொள்கைகளுக்காக, மதிப்பிற்காக, பெருமைக்காக நாம் எத்தனை அன்பு உள்ளங்களை காயப் படுத்துகின்றோம்? அன்பை விட பணத்திகும், ஆடம்பர வாழ்விற்கும் முன்னுரிமை கொடுக்கின்றோம். இதனால் சீரழிந்த குடும்பங்கள் எத்தனை? வழி தவறிப்போன பிள்ளைகள் எத்தனை? உடைந்துபோன உறவுகள் எத்தனை? நற்செய்தியில் மக்கள் யேசுவை தேடி வருகின்றார்கள் என்று பார்க்கின்றோம். அவர் சொல்வதைக் கேட்க, தமது நோயில் இருந்து விடுதலை பெற அவர்கள் யேசுவை நாடி சென்றார்கள். இன்று நாம் பலவழிகளை நாடி செல்கின்றோம். ஆனால் கடவுளை தேடி செல்வது இல்லை. தேவை வரும்போது தேடுவதும், தேவை முடிந்தவுடன் மறப்பதும் எமது இயல்பாகிவிட்டது. துன்பங்களை சந்திக்கும் போது, நோய்கள் தாக்கும்போது, பிரச்சனைகள் வரும்போதுதான் கடவுள் என்று ஒருவர் இருப்பதை நாம் நினைக்கின்றோம் அல்லவா? இறைவன் எமது ஆயனாகவும் நாம் அவரின் மந்தைகளாகவும் இருக்கின்றோம். ஆயனின் குரலுக்கு செவிகொடுத்து, அதன்படி வாழ நாம் அழைக்கப் பட்டுள்ளோம். இதற்கு தடையாக இருக்கும் இவ்வுலக மாயக் கவற்சிகளை இனம் கண்டு அவற்றை தவிர்த்து வாழ முயல்வோம். இதற்கு ஆவியானவர் நமது வழித்துணையாக வருவாராக!